1978 மார்ச் 22]

துவங்கும் நேரத்தை மாற்றியமைத்ததை எதிர்த்துப் பள்ளி மாணவர்களின் பெற்றோர்கள், ஆசிரியர்கள் ஆகியோரிடமிருந்து முறையீடுகள் வந்தன. அம்முறையீடுகளை பரிசீலனை செய்து, பள்ளிக் கல்வி இயக்குனர் பள்ளிகள் துவங்கும் வேலை நேரத்தைக் கீழ்க்கண்டவாறு மாற்றியமைக்கலாம் என்கிற கருத்துருவை அரசுக்கு அனுப்பியுள்ளார். தென் சென்னை பள்ளிகள் காலை 9—30 மணி, வட சென்னை பள்ளிகள் காலை 10—00 மணி. பள்ளி மாணவர்கள் மற்றும் கல்லூரி மாணவர்கள் சென்னை நகர பஸ்களில் நெரிசல் இன்றி சௌகரியமாகப் பிரயாணம் செய்வதற்கு போக்குவரத்துத் துறையினர்தான் வசதி செய்து கொடுக்கமுடியும். அந்தத் துறையினரோடு தொடர்பு கொண்டு பரிசிலனை செய்யப்பட்டு வருகிறது.

திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நேரத்தை மாற்றுவது பற்றிய கருத்தைத் தெரிவித்திருக்கிறார்கள், $9\frac{1}{2}$ மணிக்கு தென் சென்னை பள்ளிகளை ஆரம்பிக்கலாம் என்று. அந்தக் கருத்தை உடனடியாக நிறைவேற்ற என்ன தடை இருக்கிறது? போக்குவரத்தைப் பற்றிக் குறிப்பிட்டார்கள். ஹைஸ்கூல்களுக்குக் கொஞ்சம் கஷ்டமாக இருக்கிறது. லோயர் ஸ்கூல், ஹையர் எலிமென்டரி ஸ்கூல், எலிமென்டரி ஸ்கூல் போன்றவைகளை அடுத்த ஆண்டு பள்ளிகள் ஆரம்பிப்பதிலே இருந்து இந்த உத்தரவை இட நடவடிக்கை எடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவர் அவர்களே, அதற்குள் முடிவெடுக்கப்படும் என்றே எதிர்பார்க்கப்படுகிறது.

ஊராட்சி ஒன்றியப் பள்ளிகள்.

*660 வினா—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு கல்வித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா —

ஊராட்சி ஒன்றியப் பள்ளிகள் அனைத்தையும் அரசே ஏற்றுக் கொள்ளும் யோசனை பரிசீலனையில் உள்ளதா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : இல்லை.

திரு. எஸ். ஆர். இராதா : பேரவைத் தலைவர் அவர்களே, பல்வேறு கிராமங்களில் தனியார் பள்ளிகளை வைத்துக் கொண்டு சரியாக நிர்வாகம் செய்யாமல் பல்வேறு ஊழல்கள் நடக்கின்றன. அந்த ஊழலைக் களைவதற்கு தேசிய மயம் ஆக்குதல் என்ற அடிப்படையில் ஊராட்சி ஒன்றியங்களில் இருக்கிற எல்லாப் பள்ளிகளையும் ஏற்றுக் கொள்ள அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவர் அவர்களே, இப்போது அப்படி ஒரு யோசனை இல்லை.

திரு. இரா. தாமரைக்கனி : தலைவர் அவர்களே, ஊராட்சி ஒன்றியப் பள்ளிகளை அரசு ஏற்க இயலாது என்றால் மக்கள் குழு அமைத்து அந்தப்பள்ளிகள் சரியாக இயங்குகின்றனவா என்று அரசு கவனிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவர் அவர்களே ஒவ்வொரு பள்ளியிலும் பெற்றோர்—ஆசிரியர் சங்கம் இருக்க வேண்டும் என்று இப்போது நாம் வலியுறுத்தி வருகிறோம். அது அமைந்து செயல்பட்டாலே நாம் சொல்லுகின்ற சில குறைபாடுகள் நீங்கி பள்ளிகள் நல்லமுறையில் நடக்க வாய்ப்பு இருக்கும்.

டாக்டர் கே. சமரசம் : தலைவர் அவர்களே, ஊராட்சி ஒன்றியப் பள்ளிகள் ஒன்றியப் பெருந் தலைவர்கள் நிர்வகிக்கக் கூடிய வழியிலே இருப்பதால் பெருந் தலைவர்களுடைய கருத்துப்படி தான் பெரும் தவறுகள் நடப்பதாகக் கருதப்படுகிறது. எனவே, அந்தப் பள்ளிகளைக் கொண்டு ஒரு கல்வி வாரியம் தனியாக அமைக்க அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவர் அவர்களே, இந்த ஊராட்சி ஒன்றியப் பள்ளிகள் நல்ல முறையில் இயங்குவதற்கு அவர்களுக்கு ஆய்வாளர்களை வைத்திருக்கிறோம்? ஆகவே நிர்வாகத்திலே ஒருவர் இருக்கின்றார் என்ற காரணத்தாலே நாம் இந்தக் குற்றங்களைச் சொல்ல முடியாது. குறைகளைக் களைய போதுமான பாதுகாப்புகள் இருக்கின்றன. ஆகவே அந்த அடிப்படையில் நாம் பரிசீலனை செய்கிறோம்.

திரு. செ. சிவசாமி : தலைவர் அவர்களே, ஊராட்சி ஒன்றியப் பள்ளிகளில் தரம் மிகவும் குறைந்திருக்கின்றன என்பது தெரிந்திருந்தும் அந்தக் கிராமாந்திர பள்ளிகளில் தரத்தை உயர்த்த என்ன நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன என்று தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவர் அவர்களே, இந்தக் குறைபாடுகள் போக வேண்டுமானால், பெற்றோர்கள் அதிகமான அளவுக்கு பள்ளிகளுக்கு வந்து ஆர்வம் காட்ட வேண்டும் என்றுதான் நாம் எதிர்பார்க்கிறோம்.

*661 வினா—திரு. கரு. ராம. கரியமாணிக்கம் அம்பலம் : மாண்புமிகுகல்வித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) பஞ்சாயத்து யூனியன் பள்ளியின் கல்வித்தரத்தை உயர்த்த அரசிடம் திட்டம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், விபரம் என்ன ?